புதுச்சேரி அரசு

போக்குவரத்துத் துறை

எண்:0186/TD/RTO(HQ)/2017

புதுச்சேரி, தேதி: 22-12-2017

**செய்திக் குறிப்பு**

**புதுச்சேரி யூனியன் பிரதேசம் முழுவதும் ஓட்டுனர் உரிமம் தொடர்பான இணையதள சேவை அறிமுகம்.**

புதுச்சேரி அரசானது ஓட்டுனர் உரிமம் தொடர்பான சேவைகளுக்கு விண்ணப்பித்தல் மற்றும் பணம் செலுத்துதல் ஆகியவற்றிற்கு இணையதள சேவைகளை அறிமுகம் செய்துள்ளது. தேசிய செய்தி மையத்தின் மூலம் உருவாக்கப்பட்டு தற்பொழுது மேம்படுத்தப்பட்ட மென்பொருளான சாரதி 4.0-ன் வாயிலாக ஓட்டுனர் உரிமம் தொடர்பான அனைத்து சேவைகளுக்கும் விண்ணப்பித்தல் மற்றும் பணம் செலுத்தும் முறை நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. இணையதளம் மூலம் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்தை பதிவிரக்கம் செய்து பணம் செலுத்திய பின்னரே ஓட்டுனர் உரிமம் தேர்விற்கு வரவேண்டும். ஓட்டுனர் உரிமத்தில் பெயர் மற்றும் விலாசம் திருத்ததிற்கு இனையதளம் மூலமே விண்ணப்பிக்கலாம். புதுச்சேரி ஒன்றியப்பரப்பு முழுமைக்கும் ஓட்டுனர் உரிமம் தொடர்பான வலைதள சேவை அமுலுக்கு வந்துள்ளது.

இணையதளம் மூலம் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் பொழுது, தங்களுடைய அலைபேசி எண்னை கட்டாயமாக குறிப்பிட வேண்டும். அதன் மூலமாக விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்தவுடன் தங்களுடைய விண்ணப்பத்தின் தற்போதைய நிலையினை குறுஞ்செய்தி (SMS) வாயிலாக அறிந்து கொள்ளலாம். விண்ணப்பதாரர்கள் இணயதளத்தின் மூலம் விண்ணப்பித்த பிறகு, அவ்விண்ணப்பத்தின் எண்ணை குறுஞ்செய்தி (SMS) வாயிலாக அறிந்து கொள்ளலாம். பழகுனர் உரிமம் அல்லது ஓட்டுனர் உரிமம் ஆகியவற்றில் விண்ணப்பதாரர் பெற்ற வெற்றி அல்லது தோல்வி முடிவுகள் அவருடைய அலைபேசிக்கு குறுஞ்செய்தி (SMS) மூலம் அனுப்பப்படும். மேலும், விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய விண்ணப்பத்தின் எண் மற்றும் பிறந்த தேதியை இணையதளதில் குறிப்பிட்டு அவரவர் விண்ணப்பத்தின் நிலையினை அறிந்து கொள்வதற்கும் வசதி உள்ளது.

பழகுனர் உரிமம் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் பழகுனர் உரிமத்தை இணையதளம் வாயிலாக <u>https://transport.puducherry.gov.in</u> பதிவிரக்கம் செய்யலாம். பழகுனர் உரிமம் பெறுவதற்கு போக்குவரத்து துறையின் இணையதளத்தில் முதற் பக்கத்தில் உள்ள பழகுனர் உரிமம் (LLR) இணைப்பினை தேர்வு செய்து அதில் விண்ணப்பதின் எண் மற்றும் பிறந்த தேதியை பதிவுசெய்தபின் தங்களுடைய பழகுனர் உரிமத்தை (LLR) பதிவிரக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பதாரர்கள், பழகுனர் உரிமத்தை (LLR) பெறுவதற்கு போக்குவரத்து துறைக்கு வர அவசியமில்லை.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் ஓட்டுனர் உரிமம் தொடர்பான அனைத்து சேவைகளும் இணையதளம் வாயிலாக சிறந்த முறையில் செயல்படுத்தப்படுகிறது பொதுமக்கள் அனைவரும் இணையதள சேவையினை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

GOVT OF PONDICHERRY * TRANSPORT DEPARTMENT *

(எஸ்.டி.சுந்தரேசன்)

போக்குவரத்து ஆணையர்